www.Padasalai.Net www.CBSEtips.in

# செலக்சன்

9

தமிழ்

அன்பு நிலையம்
மதுரை – 625001

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# செலக்சன்

⑨

## ஒன்பதாம் வகுப்பு

# தமிழ்

📱 94430 43338
📱 94430 46662

வெளியிடுபவர்

**அன்பு நிலையம்**

129, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625001.

விலை ₹240

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## பொருளடக்கம்


| வ.எண் | பொருண்மை / இயல் | | பாடத்தலைப்புகள் | ப. எண். |
|---|---|---|---|---|
| | | | மனப்பாடப்பகுதி | 4 |
| 1. | | 1.அ | திராவிட மொழிக்குடும்பம் – உரைநடை | 8 |
| | மொழி | 1.ஆ | தமிழோவியம் – செய்யுள் | 12 |
| | அமுதென்று | 1.இ | தமிழ்விடு தூது* – செய்யுள் | 15 |
| | பேர் | 1.ஈ | வளரும் செல்வம் – துணைப்பாடம் | 18 |
| | | 1.உ | தொடர் இலக்கணம் – இலக்கணம் | 20 |
| | | 1.ஊ | மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 26 |
| | | 1.எ | மொழியோடு விளையாடு–மொழிப்பயிற்சி | 29 |
| 2. | இயற்கை, | 2.அ | நீரின்றி அமையாது உலகு – உரைநடை | 34 |
| | சுற்றுச் சூழல் | 2.ஆ | பட்டமரம் – செய்யுள் | 38 |
| | உயிருக்கு | 2.இ | பெரியபுராணம் * – செய்யுள் | 40 |
| | வேர் | 2.ஈ | புறநானூறு * – செய்யுள் | 43 |
| | | 2.உ | தண்ணீர் – துணைப்பாடம் | 46 |
| | | 2.ஊ | துணைவினைகள் – இலக்கணம் | 48 |
| | | 2.எ | மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 50 |
| | | 2.ஏ | மொழியோடு விளையாடு–மொழிப்பயிற்சி | 53 |
| 3. | | 3.அ | ஏறுதழுவுதல் – உரைநடை | 58 |
| | பண்பாடு | 3.ஆ | மணிமேகலை – செய்யுள் | 62 |
| | உள்ளத்தின் | 3.இ | அகழாய்வுகள் – துணைப்பாடம் | 66 |
| | சீர் | 3.ஈ | வல்லினம் மிகும் இடங்கள்– இலக்கணம் | 69 |
| | | 3.உ | மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 72 |
| | | 3.ஊ | மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 75 |
| | | 3.எ | திருக்குறள் * | 78 |
| 4. | அறிவியல், தொழில்நுட்பம் | 4.அ | இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும் – உரைநடை | 83 |
| | எட்டுத்திக்கும் | 4.ஆ | ஓ, என் சமகாலத் தோழர்களே !* –செய்யுள் | 88 |
| | சென்றிடுவீர் | 4.இ | உயிர்வகை* – செய்யுள் | 90 |
| | | 4.ஈ | விண்ணையும் சாடுவோம் – துணைப்பாடம் | 94 |
| | | 4.உ | வல்லினம் மிகா இடங்கள் – இலக்கணம் | 98 |
| | | 4.ஊ | மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 101 |
| | | 4.எ | மொழியோடு விளையாடு–மொழிப்பயிற்சி | 105 |
| 5. | | 5.அ | கல்வியில் சிறந்த பெண்கள் – உரைநடை | 107 |
| | கல்வி | 5.ஆ | குடும்ப விளக்கு – செய்யுள் | 112 |
| | கசடற | 5.இ | சிறுபஞ்சமூலம் * – செய்யுள் | 117 |
| | மொழிதல் | 5.ஈ | வீட்டிற்கோர் புத்தகசாலை – துணைப்பாடம் | 120 |


www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



# பொருளடக்கம்



| வ.எண் | பொருண்மை / இயல் | | பாடத்தலைப்புகள் | | ப. எண். |
|---|---|---|---|---|---|
| | | 5.உ | இடைச்சொல் – உரிச்சொல் | – இலக்கணம் | 124 |
| | | 5.ஊ | மொழியை ஆள்வோம் | – மொழிப்பயிற்சி | 130 |
| | | 5.எ | மொழியோடு விளையாடு | –மொழிப்பயிற்சி | 133 |
| 6. | கலை, | 6.அ | சிற்பக்கலை | – உரைநடை | 137 |
| | அழகியல், | 6.ஆ | இராவண காவியம் * | – செய்யுள் | 142 |
| | புதுமைகள் | 6.இ | நாச்சியார் திருமொழி | – செய்யுள் | 148 |
| | கலை பல | 6.ஈ | செய்தி | – துணைப்பாடம் | 151 |
| | வளர்த்தல் | 6.உ | புணர்ச்சி | – இலக்கணம் | 153 |
| | | 6.ஊ | மொழியை ஆள்வோம் | – மொழிப்பயிற்சி | 157 |
| | | 6.எ | மொழியோடு விளையாடு | –மொழிப்பயிற்சி | 159 |
| | | 6.ஏ | திருக்குறள் * | | 163 |
| 7. | நாகரிகம், | 7.அ | இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு | – உரைநடை | 166 |
| | தொழில், | 7.ஆ | சீவக சிந்தாமணி * | – செய்யுள் | 171 |
| | வணிகம், நாடு, | 7.இ | முத்தொள்ளாயிரம் * | – செய்யுள் | 175 |
| | சமூகம், அரசு, | 7.ஈ | மதுரைக்காஞ்சி | – செய்யுள் | 178 |
| | நிருவாகம், | 7.உ | சந்தை | – துணைப்பாடம் | 182 |
| | வாழிய நிலனே | 7.ஊ | ஆகுபெயர் | –இலக்கணம் | 185 |
| | | 7.எ | மொழியை ஆள்வோம் | – மொழிப்பயிற்சி | 189 |
| | | 7.ஏ | மொழியோடு விளையாடு | –மொழிப்பயிற்சி | 193 |
| 8. | அறம், தத்துவம், | 8.அ | பெரியாரின் சிந்தனைகள் | – உரைநடை | 195 |
| | சிந்தனை | 8.ஆ | ஒளியின் அழைப்பு | – செய்யுள் | 199 |
| | என்தலைக் | 8.இ | தாவோ தே ஜிங் | – செய்யுள் | 202 |
| | கடனே | 8.ஈ | யசோதர காவியம் * | – செய்யுள் | 205 |
| | | 8.உ | மகனுக்கு எழுதிய கடிதம் | – துணைப்பாடம் | 208 |
| | | 8.ஊ | யாப்பிலக்கணம் | – இலக்கணம் | 210 |
| | | 8.எ | மொழியை ஆள்வோம் | – மொழிப்பயிற்சி | 215 |
| | | 8.ஏ | மொழியோடு விளையாடு | –மொழிப்பயிற்சி | 218 |
| 9. | மனிதம், | 9.அ | விரிவாகும் ஆளுமை | – உரைநடை | 221 |
| | ஆளுமை | 9.ஆ | அக்கறை * | – செய்யுள் | 225 |
| | அன்பென்னும் | 9.இ | குறுந்தொகை | – செய்யுள் | 227 |
| | அறனே | 9.ஈ | தாய்மைக்கு வறட்சி இல்லை! | – துணைப்பாடம் | 229 |
| | | 9.உ | அணியிலக்கணம் | – இலக்கணம் | 231 |
| | | 9.ஊ | மொழியை ஆள்வோம் | – மொழிப்பயிற்சி | 234 |
| | | 9.எ | மொழியோடு விளையாடு | –மொழிப்பயிற்சி | 238 |



* இக்குறியிடப்பட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## மனப்பாடப் பகுதி

### இயல் – 1

**தமிழ்விடு தூது**

**சீர்பெற்ற செல்வம்**

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் – மண்ணில்
குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ – திறம்எல்லாம்
வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே

### இயல் – 2

**பெரியபுராணம்**

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்

– **சேக்கிழார்**

**புறநானூறு**

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே ;
நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே !

– **குடபுலவியனார்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## இயல் – 3

**திருக்குறள்**

**பொறையுடைமை**

3. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

**கேள்வி**

7. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

**வினைத்தூய்மை**

14. ஒஓதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.

– **திருவள்ளுவர்**

## இயல் – 4

**ஓ, என் சமகாலத் தோழர்களே!**

அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்
கரிகா லன்தன் பெருமை எல்லாம்
கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்.

ஏவும் திசையில் அம்பைப் போல
இருந்த இனத்தை மாற்றுங்கள்
ஏவு கணையிலும் தமிழை எழுதி
எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்

– **வைரமுத்து**

**உயிர்வகை**

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

– **தொல்காப்பியர்**

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## இயல் – 5

**சிறுபஞ்சமூலம்**

**அறிவுடையார் தாமே உணர்வர்**

பூவாது காய்க்கும் மரம் உள ; நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார் ; தாவா,
விதையாமை நாறுவ வித்துஉள ; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.

**– காரியாசான்**

## இயல் – 6

**இராவண காவியம்**

**மருதம்**

கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும்.

**– புலவர் குழந்தை**

**திருக்குறள்**

**குடிமை**

4. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

**சான்றாண்மை**

5. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

**நாணுடைமை**

8. பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

**உழவு**

9. சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

**– திருவள்ளுவர்**

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## இயல் – 7

**சீவக சிந்தாமணி**
**தலைவணங்கி விளைந்த நெற்பயிர்**

சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே
– திருத்தக்கதேவர்

**முத்தொள்ளாயிரம்**
**சேரநாடு**

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட (து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு

## இயல் – 8

**யசோதர காவியம்**

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே"

## இயல் – 9

**அக்கறை**

சைக்கிளில் வந்த
தக்காளிக் கூடை சரிந்து
முக்கால் சிவப்பில் உருண்டது
அனைத்துத் திசைகளிலும் பழங்கள்
தலைக்கு மேலே
வேலை இருப்பதாய்க்
கடந்தும் நடந்தும்
அனைவரும் போயினர்
பழங்களை விடவும்
நசுங்கிப் போனது
அடுத்த மனிதர்கள்
மீதான அக்கறை – கல்யாண்ஜி

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# செலக்சன்

# ⑨ தமிழ்

இயல் ஒன்று — அமுதென்று பேர்

உரைநடை உலகம்

இயல் ஒன்று — 1.அ. திராவிட மொழிக் குடும்பம் – உரைநடை

**மதிப்பீடு**

**பகுதி – I. (ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக. (பாடநூல் வினா)**

**1. குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்ந்தெடுக்க.**

| குழு – 1 | குழு – 2 | குழு – 3 | குழு – 4 |
|---|---|---|---|
| நாவாய் | மரம் | துறை | தன்வினை |
| ------ | ------- | ------- | --------- |

அ) 1–வங்கம், 2–மானு, 3–தாழிசை, 4–பிறவினை

ஆ) 1–தாழிசை, 2–மானு, 3–பிறவினை, 4–வங்கம்

இ) 1–பிறவினை, 2–தாழிசை, 3–மானு, 4–வங்கம்

ஈ) 1–மானு, 2–பிறவினை, 3–வங்கம், 4–தாழிசை

**விடை: அ) 1–வங்கம், 2–மானு, 3–தாழிசை, 4–பிறவினை**

---

**பலவுள் தெரிக. (கூடுதல் வினா)**

**2. இந்தியநாடு மொழிகளின் காட்சிச் சாலையாகத் திகழ்கிறது என்று குறிப்பிட்டவர் .........**

அ) கே.வி.சுப்பையா ஆ) ச.அகத்தியலிங்கம் இ) வி.இராமசாமி ஈ) பரோ

**விடை: ஆ) ச.அகத்தியலிங்கம்**

**3. ஐரோப்பிய மொழியோடு தொடர்புடையது வடமொழி என்று கூறியவர் ...................**

அ) கால்டுவெல் ஆ) வில்லியம் ஜோன்ஸ்

இ) பிரான்சிஸ் எல்லிஸ் ஈ) ஹோக்கன் **விடை: ஆ) வில்லியம் ஜோன்ஸ்**

**4. தென்னிந்திய மொழிகள் அனைத்தையும் இணைத்துத் தமிழியன் எனப்பெயரிட்டவர் ..........**

அ) பிரான்சிஸ் எல்லிஸ் ஆ) ச. அகத்திய லிங்கம்

இ) வி. இராமசுவாமி ஈ) ஹோக்கன் **விடை: ஈ) ஹோக்கன்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**5. நடுத்திராவிட மொழிக்கு உதாரணம் ............**

அ) தோடா ஆ) இருளா

இ) கோயா ஈ) மால்தோ **விடை: இ) கோயா**

**6. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| **அ) தமிழ்** | – | **1) பாரதம்** |
| **ஆ) கன்னடம்** | – | **2) ராமசரிதம்** |
| **இ) தெலுங்கு** | – | **3) சங்க இலக்கியம்** |
| **ஈ) மலையாளம்** | – | **4) கவிராஜ மார்க்கம்** |

அ) அ–3, ஆ–4, இ–1, ஈ–2 ஆ) அ–2, ஆ–4, இ–1, ஈ–3

இ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1 ஈ) அ–3, ஆ–2, இ–4, ஈ–1

**விடை: அ) அ–3, ஆ–4, இ–1, ஈ–2**

**7. மொரிசியஸ், இலங்கை உள்ளிட்ட நாடுகளின் பணத்தாள்களில் இடம்பெற்றுள்ள மொழி ................**

அ) மலையாளம் ஆ) இந்தி

இ) தெலுங்கு ஈ) தமிழ் **விடை: ஈ) தமிழ்**

**8. இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை எம்மொழியில் உள்ளன ?**

அ) தமிழ் ஆ) கன்னடம்

இ) மலையாளம் ஈ) தெலுங்கு **விடை: அ) தமிழ்**

---

**பகுதி – II. (இரண்டு மதிப்பெண்கள்)**

**குறுவினா.(பாடநூல் வினா)**

**1. நீங்கள் பேசும் மொழி எந்த இந்தியமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது ?**

**விடை :**

★ நாங்கள் பேசும் மொழி தமிழ்.

★ தமிழ் மொழி இந்திய மொழிக் குடும்பத்தில் உள்ள தென் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது.

---

**குறுவினா.(கூடுதல் வினா)**

**2. எந்தெந்த நாடுகளில் தமிழ்மொழி பேசப்படுகின்றது ?**

**விடை :**

★ இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பிஜித்தீவு, தென் ஆப்பிரிக்கா, மொரிஷியஸ், இங்கிலாந்து, கயானா, மடகாஸ்கர், ட்ரினிடாட், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் தமிழ் மொழி பேசப்படுகின்றது.

---

**3. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க:**

**1. திராவிட மொழிகளுக்குள் மூத்த மொழியாய் விளங்குவது தமிழ்.**

**விடை :** திராவிட மொழிகளுக்குள் மூத்த மொழியாய் விளங்குவது எது ?

**2. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலைக் கால்டுவெல் எழுதியுள்ளார்.**

**விடை :** திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் யார் ?

---

**பகுதி – III. (மூன்று மதிப்பெண்கள்)**

**சிறுவினா. (பாடநூல் வினா)**

**1. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை ? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

**விடை :**

**அ) திராவிட மொழிகளின் பிரிவுகள் :**

1. தென் திராவிட மொழிகள் 2. நடுத் திராவிட மொழிகள் 3. வட திராவிட மொழிகள்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**கவிதைப்பேழை**

## இயல் ஒன்று — 1.இ. தமிழ்விடு தூது – செய்யுள்

### மதிப்பீடு

**பகுதி – I. (ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக.(பாடநூல் வினா)**

**1. தமிழ்விடு தூது ...................... என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.**

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை

இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல் **விடை: இ) சிற்றிலக்கியம்**

**2. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.**

அ) ............. இனம் ஆ) வண்ணம் .................

இ) ................ குணம் ஈ) வனப்பு ..................

(க) மூன்று, நூறு, பத்து, எட்டு (உ) எட்டு, நூறு, பத்து, மூன்று

( ) பத்து, நூறு, எட்டு, மூன்று ( ) நூறு, பத்து, எட்டு, மூன்று

**விடை: (க) மூன்று, நூறு, பத்து, எட்டு**

**3. <u>அழியா</u> வனப்பு, <u>ஒழியா</u> வனப்பு, <u>சிந்தா</u> மணி– அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு –**

அ) வேற்றுமைத் தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

**விடை: ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

---

**பலவுள் தெரிக.(கூடுதல் வினா)**

**4. வனப்பு என்னும் சொல்லின் பொருள் .................**

அ) போர் ஆ) சோம்பல்

இ) செறிவு ஈ) அழகு **விடை: ஈ) அழகு**

**5. சொல்லோடு பொருளைப் பொருத்துக.**

| | | | **விடை:** | | |
|---|---|---|---|---|---|
| அ) இராசசம் | – | குறையுடைய சுவை | **அ) இராசசம்** | – | **போர்** |
| ஆ) தாமசம் | – | போர் | **ஆ) தாமசம்** | – | **சோம்பல்** |
| இ) ஊரைசம் | – | வீரம் | **இ) ஊரைசம்** | – | **குறையுடைய சுவை** |
| ஈ) நவரசம் | – | சோம்பர் | **ஈ) நவரசம்** | – | **வீரம்** |

**6. தெள்ளமுது என்பதன் இலக்கணக்குறிப்பு ....................**

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) வேற்றுமைத்தொகை ஈ) எண்ணும்மை

**விடை: அ) பண்புத்தொகை**

**7. மனிதனால் உருவாக்கப்பட்ட வண்ணங்கள்**

அ) எட்டு ஆ) ஏழு

இ) பத்து ஈ) ஐந்து **விடை: ஈ) ஐந்து**

**8. வாயில் இலக்கியம், சந்து இலக்கியம் என வேறு பெயர்களால் அழைக்கப்படுவது ..........**

அ) தூது ஆ) கவிதை

இ) குறம் ஈ) பள்ளு **விடை: அ) தூது**

**9. தமிழ்விடு தூது எப்பாவினால் பாடப்பட்டது ?**

அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா

இ) கலிவெண்பா ஈ) சிந்துப்பா **விடை: இ) கலிவெண்பா**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**10. தமிழ்விடு தூது கொண்டுள்ள கண்ணிகளின் எண்ணிக்கை ....................**
அ) 168 ஆ) 268
இ) 368 ஈ) 468 **விடை: ஆ) 268**

**11. தமிழ்விடுதூது என்னும் நூலைப் பதிப்பித்தவர்**
அ) உ.வே.சாமிநாதையர் ஆ) திரு.வி.கல்யாணசுந்தரனார்
இ) மு.வரதராசன் ஈ) அழ.வள்ளியப்பா
**விடை: அ) உ.வே.சாமிநாதையர்**

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

***குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு***
***உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ – திறம்எல்லாம்***
***வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்***
***சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே***

**12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்.............**
அ) மணிமேகலை ஆ) பெரியபுராணம்
இ) சிறுபஞ்சமூலம் ஈ) தமிழ்விடு தூது **விடை : ஈ) தமிழ்விடு தூது**

**13. இப்பாடலின் ஆசிரியர்.............**
அ) காரியாசான் ஆ) சேக்கிழார்
இ) திருத்தக்கத்தேவர் ஈ) அறியவில்லை **விடை : ஈ) அறியவில்லை**

**14. சிந்தாமணி – இலக்கணக்குறிப்பு தருக.**
அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆ) உருவகம்
இ) பண்புத்தொகை ஈ) உவமைத்தொகை
**விடை : அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

**15. பாடலில் இடம்பெற்றுள்ள அடி, எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.**
அ) குறம், என்றும் ஆ) வந்து, என்று
இ) உறவு, வந்து ஈ) வந்து, சிந்து **விடை : ஈ) வந்து, சிந்து**

---

**பகுதி – II. (இரண்டு மதிப்பெண்கள்)**
**குறுவினா.(பாடநூல் வினா)**
**1. கண்ணி என்பதன் விளக்கம் யாது ?**
**விடை :**
★ இரண்டு கண்களைப் போல் இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர்.
★ அதேபோல் தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும்.

---

**குறுவினா.(கூடுதல் வினா)**
**2. தூது அனுப்பும் பொருட்களை எழுதுக.**
**விடை :** அன்னம், மயில், கிளி, மேகம், பூவை, தோழி, குயில், நெஞ்சு, வண்டு, தென்றல்.

---

**3. "உணர்ந்த" பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
உணர்ந்த – உணர் + த் (ந்) + த் + அ
உணர் – பகுதி
த் – சந்தி
த் – ந் ஆனது விகாரம்
த் – இறந்த கால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

---

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| **தலைமையுரை** | : | சுப.வீரபாண்டியன் தலைமை ஆசிரியர் அவர்கள் |
| **சிறப்பு விருந்தினர் மற்றும் சிறப்புரை** | : | கவிஞர் கரிகாலன் |
| **கலை நிகழ்ச்சிகள்** | : | மாணவ, மாணவியர்கள் |
| **நன்றியுரை** | : | ந. அன்பரசு |
| **நாட்டுப்பண்** | : | அனைவரும் |

## இயல் ஒன்று — 1. எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி

**I. அந்தாதிச் சொற்களை உருவாக்குக.**

**அத்தி, குருவி, விருது, இனிப்பு, வரிசையாக.**

**(எ.கா) அத்தி, திகைப்பு, புகழ்ச்சி, சிரிப்பு, புன்னகை, கைபேசி, சிறப்பு, புதுமை, மைனா**

**குருவி** – விருது, துவர்ப்பு, புகழ்ச்சி, சிரிப்பு, புன்னகை, கைதி, தித்திப்பு, புலமை.

**விருது** – துடுப்பு, புசி, சிப்பி, பிறகு, கும்மி, மிளகு.

**இனிப்பு** – புளிப்பு, புதியது, தும்பை, பையன்.

**வரிசையாக** – கடுகு, குதி, திசை, சைகை, கைராசி, சிவப்பு, புத்தாடை.

**II. அகராதியில் காண்க.**

| | | |
|---|---|---|
| **நயவாமை** | – | விரும்பாமை, சிறப்பின்மை |
| **கிளத்தல்** | – | கூறுதல், புலப்படக்கூறுதல் |
| **கேழ்பு** | – | நன்மை |
| **செம்மல்** | – | தலைவன், அரசன் |
| **புரிசை** | – | மதில், எயில் |

**III. கொடுக்கப்பட்ட வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி விடுபட்ட கட்டங்களில் காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை நிறைவு செய்க.**

| வா | | | |
|---|---|---|---|
| | **இறந்த காலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
| நான் | வந்தேன் | வருகிறேன் | வருவேன் |
| நாங்கள் | வந்தோம் | வருகிறோம் | வருவோம் |
| நீ | வந்தாய் | வருகிறாய் | வருவாய் |
| நீங்கள் | வந்தீர்கள் | வருகிறீர்கள் | வருவீர்கள் |
| அவன் | வந்தான் | வருகிறான் | வருவான் |
| அவள் | வந்தாள் | வருகிறாள் | வருவாள் |
| அவர் | வந்தார் | வருகிறார் | வருவார் |
| அவர்கள் | வந்தார்கள் | வருகிறார்கள் | வருவார்கள் |
| அது | வந்தது | வருகிறது | வரும் |
| அவை | வந்தன | வருகின்றன | வருபவை |

**தா, காண், பெறு, நீந்து, பாடு, கொடு போன்ற வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி மேற்கண்ட கட்டத்தினைப் போன்று காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை அமைத்து எழுதுக.**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் மூன்று — உள்ளத்தின் சீர்

உரைநடை உலகம்

இயல் மூன்று — 3.அ. ஏறுதழுவுதல் – உரைநடை

மதிப்பீடு

**பகுதி – I. (ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக. (பாடநூல் வினா)**

**1. பொருந்தாத இணை எது ?**

அ) ஏறுகோள் – எருதுகட்டி

ஆ) திருவாரூர் – கரிக்கையூர்

இ) ஆதிச்சநல்லூர் – அரிக்கமேடு

ஈ) பட்டிமன்றம் – பட்டிமண்டபம்

**விடை: ஆ) திருவாரூர் – கரிக்கையூர்**

**2. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.**

அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்.

ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான.

இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்.

ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்.

**விடை: ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்.**

**3. சொற்றொடர்களை முறைப்படுத்துக.**

அ) ஏறுதழுவுதல் என்பதை ஆ) தமிழ் அகராதி இ) தழுவிப் பிடித்தல் என்கிறது

(i)ஆ – அ – இ (ii)ஆ – இ – அ

(iii)இ – ஆ – அ (iv)இ – அ – ஆ

**விடை: (i)ஆ – அ – இ**

---

**பலவுள் தெரிக. (கூடுதல் வினா)**

**4. தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு.**

அ) மட்டைப்பந்து ஆ) ஏறுதழுவுதல்

இ) கபடி ஈ) மல்யுத்தம்

**விடை : ஆ) ஏறுதழுவுதல்**

**5. ........... தீவிலுள்ள கினோஸஸ் என்னுமிடத்தில் உள்ள அரண்மனைச் சித்திரங்களில் காளைப்போர் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.**

அ) அந்தமான் ஆ) கிரீட்

இ) லட்சத்தீவு ஈ) இலங்கை

**விடை : ஆ) கிரீட்**

**6. தேசிய விளையாட்டாகக் காளைச் சண்டையைக் கொண்டிருக்கும் நாடு.**

அ) ஜப்பான் ஆ) இங்கிலாந்து

இ) ஸ்பெயின் ஈ) அமெரிக்கா

**விடை : இ) ஸ்பெயின்**

**7. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறான கூற்றைக் கண்டறிக.**

அ) சிந்துசமவெளியில் கண்டறியப்பட்ட கல்முத்திரை ஏறுதழுவுதலைக் குறிப்பதாக ஐராவதம் மகாதேவன் தெரிவித்துள்ளார்.

ஆ) எகிப்தில் உள்ள பெனி–ஹாசன் சித்திரங்களில் காளைப்போர் குறித்த செய்திகள் உள்ளன.

இ) தமிழகத்தில் ஏறுதழுவுதலில் ஆயுதத்தைப் பயன்படுத்தலாம்.

ஈ) சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படும் வளையத்தினைக் குறிக்கும்.

**விடை : இ) தமிழகத்தில் ஏறுதழுவுதலில் ஆயுதத்தைப் பயன்படுத்தலாம்.**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



மண்டபம், மீனாட்சி நாயக்கர் மண்டபம், ஊஞ்சல் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், வசந்த மண்டபம், கம்பத்தடி மண்டபம், கிளிக்கூடு மண்டபம், மங்கையர்க்கரசி மண்டபம் உள்ளது. ஆயிரங்கால் மண்டபத்தில் 985 தூண்களும் நடுவில் நடராஜர் சிலையும் உள்ளது. அவை பார்ப்பதற்கு மிகவும் அழகாகத் தெரியும்.

வடக்கு கோபுரத்திற்கு அருகில் ஐந்து இசைத் தூண்கள் உள்ளன. அஷ்டசக்தி மண்டபத்தில் கலை நயமிக்க எட்டு அம்மன் சிலைகள் உள்ளன. கிழக்குகோபுரத்திற்கு எதிரே உள்ள புதுமண்டபத்தில் தல வரலாற்றை விளக்கும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மேலும், சித்திரைத் திருவிழா கோவிலின் தல வரலாற்றை எடுத்துரைக்கும் திருவிழாவாகும்.இவை அனைத்தையும் கண்டு மகிழ்ந்தேன்.

---

## கற்கண்டு

**இயல் மூன்று** — **3.ஈ. வல்லினம் மிகும் இடங்கள் – இலக்கணம்**

**மதிப்பீடு**

**பகுதி – I. (ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக. (பாடநூல் வினா)**

**1. பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் கூற்று –**

அ) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன

ஆ) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது

இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது

ஈ) பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது

**விடை: இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது**

---

**பலவுள் தெரிக. (கூடுதல் வினா)**

**2. ஐ– என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். இதற்கு எடுத்துக்காட்டு.**

அ) ஊருக்குச் செல் ஆ) மிகப்பெரியவர்

இ) நிலாச் சோறு ஈ) கதவைத் திற **விடை: ஈ) கதவைத் திற**

**3. கு– என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். எடுத்துக்காட்டு தருக.**

அ) மலர்க்கை ஆ) ஊருக்குச் செல்

இ) எனக்கேட்டார் ஈ) வருவதாகக் கூறு **விடை: ஆ) ஊருக்குச் செல்**

**4. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது ?**

அ) எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகும்.

ஆ) விளித்தொடர்களில் வல்லினம் மிகும்.

இ) உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.

ஈ) வினைத்தொகையில் வல்லினம் மிகும்.

**விடை: இ) உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.**

**5. ஓரெழுத்து ஒருமொழிக்குப்பின் வல்லினம் மிகும். உதாரணம் தருக.**

அ) பத்துப்பாட்டு ஆ) தீப்பிடித்தது

இ) தேடிப்பார்த்தேன் ஈ) வாழ்க தமிழ் **விடை: ஆ) தீப்பிடித்தது**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**மேலும் இரும்பை பயன்படுத்தி செய்தக் கோடாரி, குத்தீட்டிகள் முதலான கருவிகளும் யானை தந்தத்தினால் செய்தச் சீப்பு, மோதிரம், பகடை, காதணிகள், கண்ணாடிப் பொருள்களில் உருவாக்கிய மணிகள், வளையல், தோடு போன்றவையும் கிடைத்துள்ளன.**

**விடை :** பழங்கால மக்களின் நாகரிகம், பண்பாடுத் தொடர்பான வரலாறுகளை அகழாய்வில் கிடைக்கின்ற பொருள்களும் உறுதிப் படுத்துகின்றன. பல்வேறு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் ஆய்வு நடைபெறுகின்ற இடங்களில் கீழடியும் ஒன்று.

கீழடியில் வாழ்ந்த மக்களுள் பலர் செல்வந்தர்களாக இருந்துள்ளனர் என்பதை அகழாய்வில் கிடைத்த பொருள்கள் நமக்கு உணர்த்துகின்றன. இங்கு குறைவான எண்ணிக்கையில் தான் தங்கத்தினாலான பொருள்கள் கிடைக்கின்றன.

மேலும் இரும்பைப் பயன்படுத்திச் செய்த கோடாரி, குத்தீட்டிகள் முதலான கருவிகளும் யானைத் தந்தத்தினால் செய்த சீப்பு, மோதிரம், பகடை, காதணிகள், கண்ணாடிப் பொருள்களில் உருவாக்கிய மணிகள், வளையல், தோடு போன்றவையும் கிடைத்துள்ளன.

---

## இயல் மூன்று — 3.உ. மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி

**I. படித்துச் சுவைக்க.**

***ஆராரோ ஆரிராரோ ஆராரோ ஆரிராரோ***
***தூங்காத கண்ணே உனைத் தூங்க வைப்பேன் ஆரிராரோ***
***மாம்பழத்தைக் கீறி வயலுக்கு உரம்போட்டுத்***
***தேன் பார்த்து நெல்விளையும் செல்வந்தனார் புத்திரனோ!***
***வெள்ளித்தேர் பூட்டி மேகம்போல் மாடுகட்டி***
***அள்ளிப் படியளக்கும் அதிர்ஷ்டமுள்ள புத்திரனோ***
***முத்துச் சிரிப்பழகா முல்லைப்பூப் பல்லழகா***
***தொட்டில் கட்டித் தாலாட்டத் தூக்கம் வருமோடா***
***கதிறுக்கும் நேரத்திலே கட்டியுன்னைத் தோளிலிட்டால்***
***மதியத்து வெயிலிலே மயக்கமும்தான் வாராதோ***
***வயலிலே வேலை செய்வேன் வரப்பினிலே போட்டிடுவேன்***
***வயலைவிட்டு ஏறுமுன்னம் வாய்விட்டு அழுவாயோ ?***

***– நாட்டுப்புறப்பாட்டு, தகவலாளர் : வேலம்மாள்***

---

**II. பொன்மொழிகளை மொழிபெயர்க்க.**

**1. A nation's culture resides in the hearts and in the soul of its people - Mahatma Gandhi**

ஒரு நாட்டின் பண்பாடானது மக்களின் இதயங்களிலும், ஆன்மாவிலும் தங்கியுள்ளது.
– மகாத்மா காந்தி

**2. The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru**

மக்களின் கலை உணர்வே அவர்களின் உள்ளத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகும்.
– ஜவஹர்லால் நேரு

**3. The biggest problem is the lack of love and charity - Mother Teresa**

அன்புக் குறைவும், தொண்டுப் பற்றாக்குறையும்தான் இன்றைய மிகப்பெரிய பிரச்சனை.
– அன்னை தெரசா

**4. You have to dream before your dreams can come true - A.P.J. Abdul Kalam**

உங்கள் கனவுகள் நனவாகும்வரை கனவு காணுங்கள். – ஏ.பி.ஜே.அப்துல் கலாம்

**5. Winners don't do different things, they do things differently - Shiv Khera**

வெற்றியாளர்கள் வேறுபட்ட செயல்களைச் செய்வதில்லை, அவர்கள் செயல்களை வித்தியாசமாகச் செய்கிறார்கள். – ஷிவ் கேரா

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**V. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



*பகலவனுடன் போட்டியிட்டு*
*பனித்துளியுடன் துயில் எழுந்தேன்*
*துள்ளி வந்த புது வெள்ளம் போல்*
*அள்ளி முடித்து ஒப்பனித்து*
*ஏகினேன் கோவில் வாசலுக்கு*

*எங்கு நோக்கினும் மக்கள் திரள்*
*அவர் உள்ளம் எங்கும் உற்சாகக் கழல்*
*இருண்டு வந்த மேகம் போல்*
*திரண்டு சூழ்ந்து நின்றனர்*
*மேளதாள முழக்கங்கள்*
*ஊரை திரட்டி அழைத்தது*

*பொம்மலாட்டம் கரகாட்டம்*
*பொய்க்கால் குதிரை பட்டி மன்றம்*
*கரகாட்டம் காவடியாட்டம்*
*ஒயிலாட்டம் தெருக்கூத்து என*
*கலைக் கட்டியது திருவிழா*

*கடைத் தெருக்கள் வீதியில் எங்கும்*
*மொய்த்து நின்றது அங்கு சிறார் கூட்டம்*
*தேரில் பவனி வந்தனர் கருப்புச் சித்தர்*
*பக்தியில் திளைத்து நின்றது பெரியவர் நாட்டம்*
*ஏர்பிடித்த கரங்கள் எல்லாம்*
*தேர் வடம் பிடித்தது*
*வண்ண வண்ண கோலமிட்டு*
*பொங்கலிட்டன மங்கையர் கரங்கள்*
*அங்கு குழுமி நின்றனர் அவர்தம் உறவினர்*

*வானவேடிக்கை வெடித்து சிதறின*
*அது பலகாத தூரம் எட்டி முழங்கின*
*இச்சித்திரை மாத திருவிழா*
*ஊர் மக்களுக்கோ பெருவிழா*

**VI. செயல்திட்டம்**

**தமிழ் நாட்டில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்கள் குறித்த செய்திகளை, நாளிதழ்களிலிருந்தோ புத்தகங்களிலிருந்தோ திரட்டிச் செய்திப் படத்தொகுப்பினை உருவாக்குக.**

**முன்னுரை :** நம் முன்னோர்களின் பண்பாட்டை எண்ணிப் பார்ப்பதற்கு கடந்த காலத்தைப் புரிந்து கொள்வதற்கும், நிகழ்காலத்தில் வெற்றிபெறவும், எதிர்காலத்தைக் கணிக்கவும் அகழாய்வுகள் துணை புரிகின்றன.

**பல்லாவரம் அகழாய்வு : 1863** ஆம் ஆண்டு இராபர்ட் புரூஸ்புட் என்னும் தொல்லியல் அறிஞர் சென்னைப் பல்லாவரம் செம்மண் மேட்டுப் பகுதியில் எலும்பையும் கற்கருவியையும் கண்டுபிடித்தார். இந்தக் கற்கருவிதான் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட முதல் கல்லாயுதம்.

**அரிக்கமேடு அகழாய்வு :** அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மண்பாண்டங்கள் கிடைத்தன. அதனால், ரோமானியர்களுக்கும் நமக்கும் இருந்த வணிகத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டது.

**ஆதிச்ச நல்லூர் அகழாய்வு :** அதற்குப் பின்னால், **1914** ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**6. இடைச்சொற்களைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சொற்றொடர்களை மாற்றியமைத்துக் காண்க.**

**அ) வீட்டுக்குச் செல்லத்தான் இவ்வளவு பீடிகையா ?**

**விடை :** வீட்டுக்குச் செல்லத்தான் இவ்வளவு **பீடிகையோ** ?

**ஆ) இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும்.**

**விடை :** இந்தச் சூழ்நிலை**யும்** மாறியாகவேண்டும்.

**இ) வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை.**

**விடை :** வானூர்தியைச் செலுத்து**தலும்,** உலகையும், கடலையும் அளத்**தலும்** போன்ற எந்தச் செயலு**மே** ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை.

**ஈ) சமைப்பது தாழ்வென எண்ணலாமா ?**

**விடை :** சமைப்பதை **மட்டும்** தாழ்வென எண்ணலாமா ?

**உ) பூக்காமலே சில மரங்கள் காய்ப்பதுண்டு.**

**விடை :** பூக்காமலே **கூட** சில மரங்கள் காய்ப்பதுண்டு.

**ஊ) வாளால் வெட்டினான்.**

**விடை :** வா**ளைக் கொண்டு** வெட்டினான்.

---

## இயல் ஐந்து

## 5. ஊ. மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி

**I. ஒப்பிட்டுச் சுவைப்போம்.**

| பாப்பா பாட்டு | Child's Song |
|---|---|
| *ஓடி விளையாடு பாப்பா, – நீ*<br>*ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,*<br>*கூடி விளையாடு பாப்பா, – ஒரு*<br>*குழந்தையை வையாதே பாப்பா.* | *Run about and play my sweet little child*<br>*And idle not sweet little child;*<br>*In game and sport have many mates*<br>*And revile not any one child.* |
| *காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு*<br>*கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு*<br>*மாலை முழுதும் விளையாட்டு – என்று*<br>*வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.* | *Rise at down to learn your lesson,*<br>*Then sing such airs that are soothing,*<br>*To games devote the whole evening,*<br>*Get habituated thus, oh child !* |

**II. மொழிபெயர்க்க.**

**அக்பரும் பீர்பாலும்**

*Akbar said, "How many crows are there in this city?"*
"இந்த நகரில் எத்தனை காகங்கள் உள்ளன" என்று வினவினார் அக்பர்.

*Without even a moment's thought, Birbal replied "There are fifty thousand five hundred and eighty nine crows, my lord".*
சற்றும் தாமதிக்காமல் உடனே பதிலுரைத்தார் பீர்பால் "அரசே இந்த நகரில் ஐம்பதாயிரத்து ஐநூற்று எண்பத்து ஒன்பது காகங்கள் உள்ளன."

*"How can you be so sure?" asked Akbar.*
"எப்படி அவ்வளவு உறுதியாக சொல்கிறாய்" என்று கேட்டார் அக்பர்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



*Birbal said, "Make your men count, My lord. If you find more crows it means some have come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elsewhere".*

உடனே ! பீர்பால் அக்பரைப்பார்த்து அரசே ! உடனே தங்களது பணியாளரைக் கொண்டு காகங்களை எண்ணச் சொல்லுங்கள். எண்ணிக்கையில் அதிகம் இருந்தால் எங்கிருந்தோ தங்கள் உறவினர்களைப் பார்க்க வேறு காகங்கள்இங்கு வந்திருக்க வேண்டும். எண்ணிக்கையில் குறைவாக இருந்தால் சில காகங்கள் தங்களது உறவினர்களை காண்பதற்கு எங்காவது சென்றிருக்க வேண்டும் என்று விளக்கமளித்தார்.

*Akbar was pleased very much by Birbal's wit.*

அக்பர் பீர்பாலின் அறிவுத்திறனை கண்டு மிகுந்த மகிழ்ச்சியுற்றார்.

---

**III. பிழை நீக்கி எழுதுக.**

1. **மதீனா சிறந்த இசை வல்லுநர் வேண்டும்.**
   **விடை :** மதீனா சிறந்த இசை வல்லுந<u>ராக</u> வேண்டும்.
2. **நல்ல தமிழுக்கு எழுதுவோம்.**
   **விடை :** <u>நல்ல தமிழில்</u> எழுதுவோம்.
3. **பவளவிழிதான் பரிசு உரியவள்.**
   **விடை :** பவளவிழிதான் பரிசு<u>க்கு</u> உரியவள்.
4. **துன்பத்தால் பொறுத்துக்கொள்பவனே வெற்றி பெறுவான்.**
   **விடை :** துன்பத்<u>தைப்</u> பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.
5. **குழலியும் பாடத் தெரியும்.**
   **விடை :** குழலிக்<u>கும்</u> பாடத் தெரியும்.

---

**IV. இடைச்சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.**

**(எ.கா)** **பெரும் மழை பெய்தது. வெள்ளம் கரை புரண்டு ஓடியது.**
**பெரும் மழை பெய்ததால் வெள்ளம் கரை புரண்டு ஓடியது.**

1. **அலுவலர் வந்தார்; அனைவரும் பதற்றம் அடைந்தனர்.**
   **விடை :** அலுவலர் வந்ததால் அனைவரும் பதற்றம் அடைந்தனர்.
2. **சுடர்க்கொடி பாடினாள்; மாலன் பாடினான்.**
   **விடை :** சுடர்க்கொடியும் மாலனும் பாடினர்.
3. **பழனிமலை பெரியது; இமயமலை மிகப் பெரியது.**
   **விடை :** பழனிமலையைவிட இமயமலை மிகப் பெரியது.
4. **கவலையற்ற எதிர்காலம்; கல்வியே நிகழ்காலம்.**
   **விடை :** கவலையற்ற எதிர்காலத்திற்கு கல்வியே நிகழ்காலம்.

---

**V. விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க.**

**விடை :**

*புத்தகம் படிப்போம்!* *புதியன அறிவோம்!*

## புத்தகத் திருவிழா

நாள் – **செப்டம்பர் 19 முதல் 28 வரை**
இடம் – **சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.**
நேரம் – **காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை.**

*(முதல் நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்.)*
*(நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதியப் புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்.)*

***அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!***

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## இயல் ஐந்து — 5.எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி

**I. சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை உருவாக்குக.**

**மாணவர்கள் ஆசிரியர் பாடவேளை கரும்பலகை**
**புத்தகம் எழுதுகோல் அழிப்பான் வழிபாட்டுக் கூட்டம்**
**நல்லறிவு கல்லூரி உயர்நிலை சீருடை**
**மடிக்கணினி**

**எ.கா:–** வழிபாட்டுக் கூட்டத்தில் மாணவர்கள் சீருடையுடன் நின்றனர்.

1. வகுப்பறையில் ஒரு **ஆசிரியர்** சிறந்த தலைவராக இருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு **பாடவேளை**யிலும் கற்றல் கற்பித்தல் முழுமையாக திகழ வேண்டும்.
3. வகுப்பறையில் மாணவர்களுக்கு **புத்தகம்** வாசிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.
4. கற்றலில் **எழுதுகோல்** முக்கிய பங்கு வகிக்கிறது.
5. **கரும்பலகையை** தொடர்ந்து பயன்படுத்துவதற்கு அழிப்பான் உதவி புரிகிறது.
6. மாணவர்கள் **நல்லறிவு** புத்தகங்களைப் படிக்கவேண்டும்.
7. மாணவர்கள் **உயர்நிலை** அடைய கல்வி அவசியமானது.
8. மாணவர்கள் தூய்மையான **சீருடை**யை அணிந்து வர வேண்டும்.
9. அரசு, மாணவர்களுக்கு **மடிக்கணினி**யை இலவசமாக வழங்கி வருகிறது.

**II. அகராதியில் காண்க:–**


**அரங்கு, ஒட்பம், கான், நசை, பொருநர்**

1. அரங்கு – இடம், போர்க்களம், நாடகசாலை, மன்றம், அறை
2. ஒட்பம் – அறிவு, ஒளி, மேன்மை, நன்மை, அழகு
3. கான் – காடு, வாசனை, வாய்க்கால், எழுத்துச் சாரியை, பூ, செறிவு, வீட்டறை
4. நசை – விருப்பம், ஆசை, அன்பு, பரிகாசம், ஒழுக்கம், குற்றம்
5. பொருநர் – படைவீரர், பகைவர், நடிகர், கூத்தர்.

**III. படங்களை இணைத்தால் கிடைக்கும் நூல்களின் பெயர்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

(ஒரு கிராமத்து நதி, கிழவனும் கடலும், கருப்பு மலர்கள், சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம், தண்ணீர் தண்ணீர்)

**1. நா.காமராசனின் கவிதை நூல்**




fU¥òky®fŸ

**2. திரைப்படமாக வெளிவந்த கோமல் சுவாமிநாதனின் நாடகநூல்**



j© Ù®j© Ù®

**3. நோபல் பரிசு பெற்ற எர்னஸ்ட் ஹெமிங்வேவின் குறுநாவல்**



»HtD« flY«

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் ஏழு

## 7. வாழிய நிலனே

உரைநடை உலகம்

இயல் ஏழு

## 7.அ.இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு – உரைநடை

மதிப்பீடு

**பகுதி – I. (ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக (பாடநூல் வினா).**

**1. இந்திய தேசிய இராணுவம் ............... இன் தலைமையில் ............ உருவாக்கினர்..**

அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்
இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்

**விடை : இ) மோகன்சிங், ஜப்பானியர்**

**2. கூற்று – இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவராக இருந்த தில்லான் "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்" என்றார்.**

**காரணம் – இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள்.**

அ) கூற்று சரி; காரணம் சரி ஆ) கூற்று சரி; காரணம் தவறு
இ) கூற்று தவறு ; காரணம் சரி ஈ) கூற்று தவறு; காரணம் தவறு

**விடை : அ) கூற்று சரி; காரணம் சரி**

---

**பலவுள் தெரிக (கூடுதல் வினா).**

**3. தமிழகத்திலிருந்து இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுசேர்த்தவர்**

அ) பசும்பொன் முத்துராமலிங்கனார் ஆ) தீரன் சின்னமலை
இ) வாஞ்சிநாதன் ஈ) ஒண்டி வீரன்

**விடை : அ) பசும்பொன் முத்துராமலிங்கனார்**

**4. தென்னிந்தியத் தமிழனாகப் பிறக்க வேண்டுமென பசும்பொன் முத்துராமலிங்கனாரிடம் கூறியவர்**

அ) தில்லான் ஆ) கேப்டன் தாசன்
இ) நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ஈ) கோபாலகிருஷ்ண கோகலே

**விடை : இ) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்**

**5. ஐ.என்.ஏ. வில் உள்ள வான்படைப் பிரிவின் பெயர்**

அ) நாகசாகி கேடட்ஸ் ஆ) ஒசாக்கா கேடட்ஸ்
இ) நகோயா கேடட்ஸ் ஈ) டோக்கியோ கேடட்ஸ்

**விடை : ஈ) டோக்கியோ கேடட்ஸ்**

**6. இம்பீரியல் மிலிட்டரி அகாடமி அமைந்த நாடு**

அ) பர்மா ஆ) மலேயா
இ) வியட்நாம் ஈ) ஜப்பான்

**விடை : ஈ) ஜப்பான்**

**7. இந்திய தேசிய இராணுவ வீரர்கள் ஜப்பானில் பயிற்சி பெற்ற தீவு**

அ) ஹொக்கைடோ ஆ) கியூசு
இ) ஹொன்ஷீ ஈ) ஷிகொக்கு

**விடை : ஆ) கியூசு**

www.Padasalai.Net www.CBSEtips.in



**கற்பவை கற்றபின்**

**1. நீங்கள் நாட்டிற்கு உங்கள் பங்கினை அளிக்க விரும்புகிறீர்களா ? – இந்திய இராணுவத்தில் சேருவதற்கான தகுதி, அவர்களுக்கான பணிகள் குறித்த கருத்துகளைத் திரட்டி வகுப்பில் கலந்துரையாடுக.**

**இந்திய இராணுவத்தில் சேருவதற்கான தகுதிகள்:**

**கல்வித் தகுதி :** ஆங்கிலம் மற்றும் அறிவியல் பாடங்களுடன் 10 – ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்குச் சமமானது. இந்திய தேசிய இராணுவத்தின் எந்த ஒரு பொதுப்பிரிவுக்கான தேர்வில் கலந்து கொள்வதற்கும் இந்த குறைந்தபட்ச கல்வித்தகுதி கட்டாயம் தேவை.

**வயது :** அசல் சான்றிதழின் படி 17 ½ முதல் 23 க்குள் இருக்க வேண்டும்.

**குடியுரிமை :** இந்தியாவைச் சேர்ந்த அனைத்து பிரஜைகளும் சேரலாம். சில வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் விதி முறைப்படி சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**உயரம் :** 167 செ.மீ உயரம் இருக்க வேண்டும்.

**மார்பளவு :** விரிந்த நிலையில் 77 செ.மீக்குக் குறையாமல் இருக்க வேண்டும். குறைந்த பட்சம் 5 செ.மீ. விரிவடையச் செய்ய வேண்டும்.

**உடல் எடை :** 50 கிலோ குறையாமல் இருக்க வேண்டும்.

தொற்று நோய், மாரடைப்பு, அறுவை சிகிச்சை போன்ற எந்தப் பாதிப்பும் இல்லாதவராக இருக்க வேண்டும். காது, மூக்கு, தொண்டை சரியாக இருக்க வேண்டும்.

**இராணுவத்தின் பணிகள் :**

* நாட்டைப் பாதுகாத்தல்
* அரசுரிமையைப் பாதுகாத்தல்.
* மாநில ஒருங்கிணைப்பை பாதுகாத்தல்.
* இந்தியாவை வேற்று நாடுகளின் அச்சுறுத்தலில் இருந்து பாதுகாத்தல்.
* பிற மறைமுகப் போர்களில் அரசு முகமைகளுக்கு உதவுதல்.
* பிற உள்நாட்டு அச்சுறுத்தல்களைக் களைதல்.
* குடிமக்களுக்குப் பேரிடரின் போது உதவியளித்தல்.

**2. எனக்குப் பிடித்த விடுதலைப் போராட்ட வீரர் என்ற தலைப்பில் அவர்தம் வாழ்க்கை நிகழ்வுகளைக் காலக்கோட்டில் உருவாக்குக.**

எனக்குப் பிடித்த விடுதலைப்போராட்ட வீரர் தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள்


| | |
|---|---|
| 1869 | குஜராத் (கத்தியவாத்) போர்பந்தரில் பிறந்தார். |
| 1891 | சட்டம் படிக்க பாம்பேயிலிருந்து இங்கிலாந்திற்குக் கப்பலில் பயணம். |
| 1893 | இந்திய நிறுவனம் ஒன்றிற்கு வழக்கறிஞராக ஆவதற்கு, சட்டம் படிக்கத் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்றார். |
| 1901–02 | இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். கல்கத்தாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்றார். |
| 1903 | ஜோகன்னஸ்பார்க் நகரில் சட்ட அலுவலகத்தைத் திறந்தார். |
| 1904 | இந்தியன் ஒபினியன் என்ற பெயரில் வாராந்திர இதழைத் துவக்கினார். |
| 1906 | டிரான்ஸ்வாலில் உள்ள குடியேறிய இந்தியர்களுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட அவசர சட்டத்தை எதிர்த்து ஜோகன்னஸ்பார்க்கில் தன் முதல் சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் துவக்கினார். |
| 1907 | இந்தியர்கள் கட்டாயப் பதிவு சட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தினார். |
| 1909 | இந்தியர் நிலை குறித்து எடுத்துரைக்க இங்கிலாந்திற்குக் கப்பல் பயணம். |
| 1913 | மூன்றாவது சத்தியாக்கிரகப் போராட்டம் துவங்கியது. |
| 1919 | ரவ்லட் மசோதாக்களை எதிர்த்து நாடு தழுவிய ஹர்தால் போராட்டம் நடந்தது. |
| 1921 | ஒத்துழையாமை போராட்டம் நடந்தது. |
| 1923 | "தன் சுயசரிதையை" எழுதத் துவங்குதல். |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



1924 பெல்காம் காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.
1929 லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் ஜனவரி 26 ஆம் தேதியை முழுச் சுதந்திரத்திற்கான தேதியாக அறிவிக்கப்பட்டது.
1932 பம்பாயில் சர்தார் வல்லபபாய்படேலுடன் கைது செய்யப்பட்டார்.
1942 "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தை காங்கிரஸ் நிறைவேற்றியது.
1944 இந்து–முஸ்லீம் ஒற்றுமைக்காக முகமது அலி ஜின்னாவுடன் பம்பாயில் பேச்சுவார்த்தை.
1947 இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்தது.
1948 தன் 79 ஆவது வயதில் பிர்லா ஹவுஸ்–இல் தங்கியிருந்தபோது பிரார்த்தனையில் கலந்துகொள்ளச் சென்றபோது, "நாதுராம் விநாயக் கோட்சே" என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.




## கவிதைப் பேழை

**இயல் ஏழு**

## 7.ஆ. சீவக சிந்தாமணி
**– செய்யுள்**

**மதிப்பீடு**

**பகுதி – I. (ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக (பாடநூல் வினா).**

**1. வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே – இவ்வடி உணர்த்தும் பொருள் யாது ?**

அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்
ஆ) வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்
இ) செறிவான வயலில் உழவர் வெள்ளமாய்க் கூடியிருந்தனர்
ஈ) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்

**விடை: அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அமைத்தார். திருமலை நாயக்கர் மகால் என அழைக்கப்படும் அரண்மனை திருமலை நாயக்கரால் கி.பி 1636 ஆம் ஆண்டு கட்டுவிக்கப்பட்டது. புதுமண்டபம் ஒன்றும் கட்டி முடித்தார்.

**2. நெல் விதைப்பது முதல் அரிசி புடைப்பது வரை வயற்களக் காட்சியை அறிந்து தகுந்த படங்களுடன் வகுப்பறையில் காட்சிப்படுத்துக.**

**விடை :**



**கவிதை ப்பேழை**

**இயல் ஏழு**

**7. ஈ. மதுரைக்காஞ்சி – செய்யுள்**

**மதிப்பீடு**

**பகுதி – I. (ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள்தெரிக(கூடுதல் வினா).**

**1. மாகால் எடுத்த முந்நீர் போல – இதில் மாகால் என்னும் சொல்லின் பொருள்**

அ) பனிக்காற்று ஆ) புயல்காற்று

இ) பெருங்காற்று ஈ) ஆடிக்காற்று **விடை: இ) பெருங்காற்று**

**2. சொல்லோடு பொருளைப் பொருத்துக.**

அ) புரிசை – 1) நீர்நிலை

ஆ) புழை – 2) ஓவியம்

இ) கயம் – 3) சாளரம்

ஈ) ஓவு – 4) மதில்

அ) 3, 1, 4, 2 ஆ) 2, 4, 1, 3

இ) 4, 3, 1, 2 ஈ) 3, 4, 1, 2 **விடை : இ) 4, 3, 1, 2**

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



விரிவானம்

இயல் ஏழு

## 7. உ. சந்தை

– துணைப்பாடம்

மதிப்பீடு

**பகுதி – II. (இரண்டு மதிப்பெண்கள்)**
**குறுவினா (பாடநூல் வினா):**
**1. உங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்களையும், சந்தையில் காணும் பொருள்களையும் ஒப்பிட்டு எழுதுக.**
**விடை :**

★ எங்கள் ஊரில் கத்தரிக்காய், தக்காளி, புடலங்காய், சுரைக்காய், கீரைவகைகள் உற்பத்திச் செய்யப்படுகின்றன.

★ சந்தையில் அனைத்துவகையான உள்ளூர் மற்றும் வெளியூர் காய்கறிகளும், கீரை வகைகளும், பல வகையான பச்சைப் பயறுகளும், பழ வகைகளும், கோழி, ஆடுகளும், வீட்டிற்குத்தேவையான பிற பொருள்களும் கிடைக்கும்.

---

**குறுவினா (கூடுதல் வினா):**
**2. கிராமச்சந்தை என்றால் என்ன ?**
**விடை :**

★ உள்ளூர்த் தேவைக்கு ஏற்றமாதிரி, அங்கு விளைகின்ற உணவுப்பொருள்களையும் விவசாயம், சமையல், வீடு ஆகியவற்றுக்குத் தேவையான பொருள்களையும் சிறிய அளவில் விற்கின்ற சிறுவணிகச் செயல்பாடுதான் கிராமச்சந்தை.

---

**பகுதி – IV. (எட்டு மதிப்பெண்கள்)**
**நெடுவினா (பாடநூல் வினா).**
**1. எங்கள் ஊர்ச் சந்தை – என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்றை எழுதுக.**
**விடை :**

**எங்கள் ஊர் (நாகமலை) சந்தை :**

**முன்னுரை :** எங்கள் ஊர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த நாகமலையாகும். எங்கள் ஊரில் வாரந்தோறும் வியாழக்கிழமை மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணிவரை சந்தை நடைபெறும்.

**சந்தையில் கிடைக்கும் பொருட்கள் :** சந்தையில் கிராமத்து மக்கள் தங்களுடைய நிலங்களில் விளைந்த காய்கறிகள், கீரை, தானியங்கள், பயறுவகைகள், பழங்கள் போன்றவற்றை கொண்டு வந்து விற்பார்கள் மற்றும் அச்சந்தையில் கடுகு, சீரகத்தில் இருந்து உணவு தானியங்கள், வெளியூர் காய்கறிகள், கோழி, ஆடு, மாடு, சோப்பு, சீப்பு, கண்ணாடி, வளையல்கள் போன்ற அலங்காரப் பொருள்கள், இரும்புப் பொருட்கள், பாத்திரங்கள், துணிமணிகள் என ஒரு குடும்பத்துக்கு தொழிலுக்குத் தேவையான எல்லாவற்றையும் வாங்கலாம்.

**சுற்றியுள்ள சந்தைகள் :** எங்கள் ஊரில் நடைபெறும் வாரச் சந்தைபோல் எங்கள் ஊருக்கு அருகில் உள்ள விராட்டிப்பத்து, வடபழஞ்சி, செக்காணூரணி போன்ற ஊர்களிலும் வாரச் சந்தைகள் நடைபெறுகின்றன. கிழமைகளைக் கணக்கு வைத்து ஒவ்வொரு ஊர்ச்சந்தைக்கும் சென்று வரும் வியாபாரிகளும் உண்டு. எந்தச் சந்தையில் எந்தச் சிறப்பு, எது விலை மலிவு என அனுபவத்தில் அறிந்து வாங்கிவர ஊர் ஊராகச் செல்லும் மக்களும் உண்டு.

**உறவு வளர்க்கும் சந்தை :** எங்கள் ஊர்ச்சந்தையில் வியாபாரிக்கும் வாடிக்கையாளருக்குமான உறவு என்பது வெறுமனே பொருளை விற்று வாங்குவதோடு முடிந்துவிடுவதில்லை. சந்தையில் பார்த்துப் பழகியவர்கள் சம்பந்திகளாகி, உறவினர்கள்

www.Padasalai.Net www.CBSEtips.in



ஆகிவிடுவதும் உண்டு. சந்தையின் சாதாரண விசாரிப்புகளிலும் நேசமும், நேர்மையும் உண்டு.

**விலை மலிவு :** எங்கள் ஊர்ச் சந்தையில் உற்பத்தியாளர்களே பெரும்பாலும் விற்பனையாளர்களாக இருப்பதால் அனைத்து வகையான பொருட்களும் குறைந்த விலையில் கிடைக்கின்றன.

**சமத்துவ சந்தை :** எங்கள்ஊர்ச் சந்தைக்கு போவது திருவிழாவிற்குப் போய் வருவது போல் இருக்கும். அக்கம் பக்கத்து ஊரார் உறவினர்களைச் சந்தித்துப் பேசலாம், சாதி மதத்தைத் தாண்டி சமத்துவமாக எல்லோருடனும் பழக முடியும். ஆண்–பெண் பேதமில்லாமல் இரண்டு பேரும் சந்தைச் செயல்பாடுகளில் கலந்துகொள்வார்கள். வாரம் ஒருமுறை உறவுக்காரர்களைப் பார்த்துவிட்டு வருவது போல் ஒரு மகிழ்ச்சி இருக்கும்.

**முடிவுரை :** எங்கள் ஊர்ச் சந்தையைப் போல் தமிழகத்தின் அனைத்து ஊர்களிலும் வாரச் சந்தைகளும் மாதச் சந்தைகளும் குறிப்பிட்டச் சில பொருட்களை மட்டும் விற்கும் சந்தைகளும், மாலை நேரச் சந்தைகளும் நடந்தவண்ணமே உள்ளன.

## கற்பவை கற்றபின்

**1. சந்தை நிகழ்வுகளை நாடகமாக நடித்துக் காட்டுக.**

**காட்சி–1: இடம் – வீடு: பங்குபெறுவோர் : தாய் –மீனாட்சி: மகள் – பிரியா**

**மீனாட்சி:** பிரியா சீக்கிரம் கிளம்பும்மா
**பிரியா:** நாம எங்கம்மா போறோம் ?
**மீனாட்சி:** சந்தைக்கும்மா..
**பிரியா:** சரிம்மா.. இதோ கிளம்பிட்டேம்மா... அங்க என்னம்மா இருக்கும் ?
**மீனாட்சி :** நம் வீட்டுச் சமையலுக்குத் தேவையான எல்லாக் காய்கறிகளும் இருக்கும்மா.
**பிரியா :** எனக்கு ஏதாவது வாங்கித் தரனும்மா...
**மீனாட்சி :** சரி வாம்மா....
(இருவரும் சந்தைக்குக் கிளம்புதல்)

**காட்சி – 2: இடம் – சந்தை: பங்குபெறுவோர்: தாய் –மீனாட்சி: மகள் – பிரியா: வியாபாரி– பார்வதி**

**பிரியா :** சந்தையில என்ன காய்கறிம்மா வாங்கப் போறீங்க...
**மீனாட்சி :** வெண்டைக்காய், சுரக்காய், பீக்கங்காய்...
**பிரியா :** (அம்மா காய்கறி வாங்குவதைப் பார்த்து) எனக்கு ஒரு சந்தேகம்மா....
**மீனாட்சி :** என்னம்மா சந்தேகம் ?
**பிரியா :** ஏம்மா.. வெண்டைக்காயை நுனி ஒடித்துப் பார்த்து வாங்குறீங்க ?
**மீனாட்சி :** பிஞ்சான வெண்டைக்காயான்னு நுனி ஒடித்துப் பார்த்தால் தெரியும்மா.. அதனால்தான்.
**பிரியா :** அப்படியாம்மா... சரி, பீக்கங்காய ஏம்மா கிள்ளி வாயில் போட்டு மென்னுப் பாக்குறீங்க ?
**மீனாட்சி :** பீக்கங்காயில் பூச்சி ஏதாவது ஏறியிருந்தால் அந்தக் காய் கசப்பா இருக்கும்மா.. அதற்கு மென்னு பார்க்குறேன்...
**பிரியா :** சரிம்மா... சுரக்காயை மட்டும் ஏம்மா கிள்ளிப் பார்த்து வாங்குறீங்க ?
**மீனாட்சி :** பிஞ்சா ? முத்தின காயான்னு கிள்ளிப் பார்த்தா தெரியும்மா...
**பார்வதி :** ஏம்மா... உம் மகள் ரொம்ப புத்திசாலியா வருவாம்மா...
**மீனாட்சி :** பெண்பிள்ளை இதெல்லாம் தெரிந்திருக்கிறது நல்லதுதானே பார்வதியக்கா...
**பார்வதி :** சரிம்மா. வெண்டைக்காய், பீக்கங்காய், சுரக்காய் எவ்வளவும்மா போட... ?
**மீனாட்சி :** ஒவ்வொரு கிலோ போடு அக்கா...
**பார்வதி :** சரிம்மா... பையை பிடிம்மா...
**மீனாட்சி :** பணம் எவ்வளவு ?
**பார்வதி :** அறுபது ரூபாய்ம்மா....
**மீனாட்சி :** இந்தாக்கா பணம்..
(பணத்தைக் கொடுத்துவிட்டு இருவரும் நடத்தல்)

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் எட்டு

## என்தலைக் கடனே

உரைநடை உலகம்

இயல் எட்டு

## 8.அ. பெரியாரின் சிந்தனைகள்
– உரைநடை

### மதிப்பீடு

**பகுதி – I. (ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக (பாடநூல் வினா)**

**1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:**

**கூற்று – பெரியார் உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும், 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார்.**

**காரணம் – சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று எண்ணினார்.**

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி
இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

**விடை: ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி**

---

**பலவுள் தெரிக (கூடுதல் வினா)**

**2. பகுத்தறிவுப் பகலவன் எனச் சிறப்பிக்கப்படுபவர்**
அ) பெரியார் ஆ) அண்ணா
இ) காமராஜர் ஈ) இராஜாஜி **விடை: அ) பெரியார்**

**3. மதிப்பு நூலாகப் பெரியார் கருதியது**
அ) திருக்குறள் ஆ) மகாபாரதம்
இ) தொல்காப்பியம் ஈ) சிலப்பதிகாரம் **விடை: அ) திருக்குறள்**

**4. 1938 நவம்பர் 13 இல் சென்னையில் நடந்த மாநாட்டில் ஈ.வெ.ரா.வுக்கு வழங்கப்பட்ட பட்டம்**
அ) பகுத்தறிவுப் பகலவன் ஆ) பெரியார்
இ) வைக்கம் வீரர் ஈ) ஈரோட்டுச் சிங்கம் **விடை: ஆ) பெரியார்**

**5. தந்தை பெரியாரின் இயற்பெயர்**
அ) ஈ.வே.ராமசாமி ஆ) ஈ.வே.ரங்கசாமி
இ) ஈ.வே.ராஜா ஈ) ஈ.வே.ராஜதுரை **விடை: அ) ஈ.வே. ராமசாமி**

**6. சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்**
அ) அண்ணா ஆ) பெரியார்
இ) காமராஜர் ஈ) எம்.ஜி.ஆர். **விடை: ஆ) பெரியார்**

**7. குடியரசு, விடுதலை, உண்மை இதழ்களை நடத்தியவர்**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) பெரியார் ஈ) அண்ணா **விடை: இ) பெரியார்**

---

**பகுதி – II. (இரண்டு மதிப்பெண்கள்)**

**குறுவினா(பாடநூல் வினா).**

**1. 'பகுத்தறிவு' என்றால் என்ன ?**

**விடை :**

★ எச்செயலையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகி, ஏன் ? எதற்கு ? எப்படி ? என்ற வினாக்களை எழுப்பி, அறிவின் வழியே சிந்தித்து முடிவெடுப்பதே பகுத்தறிவாகும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

**1. "இன்று பெரியார் இருந்திருந்தால்" என்னும் தலைப்பில் மேடைப் பேச்சுக்கான உரை ஒன்றை எழுதுக.**

**விடை :**

**இன்று பெரியார் இருந்திருந்தால்...**

★ சிந்தனையும் கருத்துகளும் பகுத்தறிவுப் பாதையும் இன்றும் நாளையும் தமிழர்களின் தலைமுறைகளுக்கு வழிகாட்டிக் கொண்டே இருக்கும்.

★ சாதி சமயப் பிரிவுகள் முழுவதும் தகர்த்தெறியப்பட்டிருக்கும்.

★ மனித சமுதாயத்தின் வாழ்க்கை வழிகாட்டியாக மதங்கள் மாற்றப்பட்டிருக்கும்.

★ கல்வித்துறையிலும், தேர்வுத் துறையிலும் பெரும் மாற்றங்கள் உருவாக்கப்பட்டிருக்கும்.

★ பெண் கல்வி 100% என்ற நிலையை எப்போதோ அடைந்திருக்கும்.

★ தமிழ் மொழி வளர்ச்சியிலும், இலக்கிய வளர்ச்சியிலும் உன்னதமான நிலை ஏற்பட்டிருக்கும்.

★ பெண்கள் நலம், வேலை வாய்ப்பு போன்ற பணிகளிலும் பெண்களின் நிலை உயர்த்தப்பட்டிருக்கும்.

★ சிக்கனம் என்னும் அருங்குணம் மக்கள் மனதில் விதைகளாக விதைக்கப்பட்டிருக்கும்.

---

**2. பெரியாரை நேர்காணல் செய்வதாகக் கருதி வினாப்பட்டியலை உருவாக்குக.**

**விடை :**

★ பெண்கள் முன்னேற்றத்திற்கு பெருந்தடையாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள் ?

★ நாட்டிலுள்ள கேடுகளில் பெருங்கேடு எதுவாக இருக்கும் ?

★ சுயமரியாதை இயக்கம் பற்றிய கருத்துகளைத் தெளிவாகக் கூறுங்கள் அய்யா ?

★ சமூகத்தின் கண்களாக யாரைக் கருதுகிறீர்கள் ?

★ ஒழுக்கம் குறித்துத் தங்களின் கருத்து யாது ?

★ "மதங்கள்" மனிதர்களுக்கு எவற்றை கொடுப்பவையாக மாறவேண்டும் ?

★ சமூக வளர்ச்சிக்கு உரிய கருவியாக எதைக் கருதுகிறீர்கள் ?

★ எத்தகைய கல்வி அனைவருக்கும் கொடுக்கப்படவேண்டும் ?

★ தமிழில் எத்தகைய நூல்கள் படைக்கப்பட வேண்டுமென விரும்புகிறீர்கள் ?

★ "பெண்களின் நலம்" பற்றித் தங்களின் கருத்து யாது ?

★ சிக்கனம் என்னும் அருங்குணத்தை யாரிடம் கற்றீர்கள் ?

---

**3. 'இன்றைய சமூகம் பெரியாரின் பாதையில் நடக்கிறதா ? நடக்கவில்லையா ?' எனும் தலைப்பில் கலந்துரையாடல் நடத்துக.**

*தொண்டு செய்து பழுத்த பழம்*
*தூயதாடி மார்பில் விழும்*
*மண்டைச் சுரப்பை உலகு தொழும்*
*மனக்குகையில் சிறுத்தை எழும்*
*அவர்தாம் பெரியார் – பார்*
*அவர்தாம் பெரியார்*

– புரட்சிக்கவி பாரதிதாசன்



நண்பர் : 1. இன்றைய சமூகம் பெரியார் வழியில் நடக்கிறதா....... ?
நண்பர் : 2. ஆமாம். நடக்கிறது
நண்பர் : 1. எப்படிச் சொல்கிறாய் ?
நண்பர் : 2. தமிழ் சமூகம் அவரால் பல படி முன்னேறியிருக்கிறது.
நண்பர் : 3. விளக்கமாகச் சொல்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | |
|---|---|
| **ஆசிரியர் :** | என்ன சந்தேகம் ? |
| **அகில் :** | ஔவையார் ஆறுவது சினம் என்கிறார். இதன் பொருளை விளக்குங்கள் ஐயா. |
| **ஆசிரியர் :** | முகில் உனக்கு விடை தெரியுமா ? |
| **முகில் :** | தணியவேண்டியது கோபம் என்னும் உஷ்ணமாகும். |
| **ஆசிரியர் :** | சரியாகச் சொன்னாய். |
| **அகில் :** | இதைப் போன்று கருத்துள்ள தொடர் வேறு உண்டா ஐயா ? |
| **ஆசிரியர் :** | "போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக"என்ற தொடர் யசோதர காவியத்தில் இடம் பெற்றிருக்கிறது. |
| **அகில் :** | "வெகுளி" என்ற சொல்லின் பொருள் என்னங்க ஐயா ? |
| **ஆசிரியர் :** | முகில் உனக்குத் தெரியுமா ? |
| **முகில் :** | வெகுளி என்றால் கோபம் தானே ஐயா |
| **ஆசிரியர் :** | நன்று, இத்தொடரின் பொருள் தெரியுமா ? |
| **முகில் :** | கூறுங்கள் ஐயா. |
| **ஆசிரியர் :** | நம்மிடம் உள்ள தீயப் பண்புகளை நீக்கிட வேண்டும் என்பது பொருள். (சினத்தை நீக்கி நன்மைத் தரக்கூடிய செயல்களைச் செய்ய வேண்டும் என்பதை இத்தொடர்கள் விளக்குகின்றன என அறிந்துகொண்டோம் ஐயா நன்றி.) |

---

## விரிவானம்

**இயல் எட்டு**

### 8. உ. மகனுக்கு எழுதிய கடிதம்
**– துணைப்பாடம்**

**மதிப்பீடு**

**பகுதி – IV. (எட்டு மதிப்பெண்கள்)**
**நெடுவினா (பாடநூல் வினா) :**

**1. மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டிருக்கும் தன்மகனுக்கு நா.முத்துக்குமார் எழுதியுள்ள கடிதச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை :** மறைந்த நா.முத்துக்குமார் ஒரு பிரபல பத்திரிக்கைக்கு 2011 ஆம் ஆண்டில் "அணிலாடும் மூன்றில்" என்ற தொடரில் தனது மகனுக்கு எழுதிய கடிதமே நமக்குப் பாடமாக அமைந்துள்ளது.

**முதல் கடிதம் :** அன்புள்ள மகனுக்கு அப்பா எழுதுவது. இது உனக்கு எழுதும் முதல் கடிதம். இதைப் படித்துப் புரிந்துகொள்ளும் வயது உனக்கு இல்லை. இப்பொழுதுதான் மொழியின் விரல் பிடித்து நடக்கக் கற்றுக்கொண்டிருக்கிறாய். உனக்குப் புரியும் மொழியில் எழுதவேண்டுமானால் நான் கடவுள் மொழிதான் கற்க வேண்டும்.

என் பிரியத்துக்குரிய மகனே, நீ மருத்துவமனையில் பிறந்தபொழுது, உனை அள்ளி எடுத்து என் கையில் கொடுத்தார்கள். என் உதிரம் ஒரு உருவமானது. அந்த உருவம் தற்போது என் உள்ளங்கையில் கிடப்பதும், அது குறுகுறு என கை நீட்டி எனது சட்டையைப் பிடித்து இழுப்பதை என் கண்ணீர் மல்கப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன்.

**பெருஞ்செல்வம் :** உலகிலேயே பெருஞ்செல்வம், "தம் மக்கள் மெய் தீண்டல் உயிருக்கு இன்பம்" என்கிறார் திருவள்ளுவர். நீ என்னைத் தீண்டினாய், நான் தூள் தூளானேன். நீ சிரித்தாய், அழுதாய், குப்புறக் கவிழ்ந்தாய், தலை நிமிர்ந்தாய். உன் பிஞ்சு பாதத்தால் இந்தத் தரையெல்லாம் உனதாக்கினாய். மழலை மொழி பேசி இறைவனை நமது வீட்டுக்கு அழைத்து வந்தாய். இந்தச் செய்கையே பல்வேறு வடிவங்களில் பிரதிபலிக்கப்போகிறது. அப்போது இந்த உலகமே உனக்கான தரையாகும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. கதையைத் தொடர்ந்து எழுதித் தலைப்பிடுக.**

**"பூனைக்கு மணி கட்டிய புத்திசாலி எலி"**

சுண்டெலிகளுக்குப் பூனையால் மிகவும் துன்பமான நேரம். ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று சுண்டெலிகளைப் பிடித்துத் தின்றது பூனை. சுண்டெலிகள் ஒன்று சேர்ந்து, என்ன செய்வது என்று ஆலோசித்தன. அவை மேலும் மேலும் ஆலோசித்தன. ஆனால், ஒரு முடிவும் கிடைக்கவில்லை.

பிறகு ஒரு சின்ன சுண்டெலி சொன்னது:

பூனைக்கு என்ன செய்யவேண்டும் என்று நான் சொல்கிறேன். பூனை எப்போது நம்மைப் பிடிக்க வருகிறது என்று நமக்குத் தெரிவதில்லை. கட்டாயம் நாம் அதைச் செய்தாக வேண்டும்....

நாம் எப்படியாவது முயன்று பூனையின் கழுத்தில் ஒரு மணியைக் கட்டிவிட்டால் போதும். அது வரும்போதெல்லாம் மணி ஓசை நமக்குக் கேட்கும். நாம் வளைக்குள் பாதுகாப்பாகப் பதுங்கிக் கொள்ளலாம். பூனையால் நம்மைப் பிடிக்கவே முடியாது" என்றது.

" ஆ.. அருமையான திட்டம்" என்று பல எலிகள் அந்தச் சுண்டெலியைப் பாராட்டின.

"திட்டம் நல்ல திட்டம்தான் , ஆனால் அதை நிறைவேற்றுவதில் ஒரு சிக்கல் உள்ளதே.." என்றது ஒரு கிழ எலி.

" பூனையின் கழுத்தில் மணி கட்டப்போவது யார் ? நீங்களா அல்லது திட்டத்தைச் சொன்ன சுண்டெலியா ? நம்மால் பூனையின் அருகே சென்று உயிருடன் திரும்ப முடியுமா ? இயலாத செயலுக்கு ஏன் இப்படி ஆரவாரம் ?

எல்லா எலிகளும் தலையைக் கவிழ்ந்தன. ஆனால் இரு இளம் எலிகள் இரு வேறு யோசனைகள் கூறின. அதைப் பயன்படுத்திப் பூனையின் கழுத்தில் மணியைக் கட்டின. அவற்றைக் கேட்டு வியந்த மற்ற எலிகள் இவ்விரு எலிகளின் புத்திக்கூர்மையை மெச்சின.

அடுத்த நாள் பூனை வரும்போது மணியோசை கேட்டது. எலிகள் ஓடி ஒளிந்தன. பூனைக்கு ஏமாற்றம். அதற்குப் பிறகு பூனையால் ஒரு எலியைக்கூடப் பிடிக்க முடியவில்லை.

முதல் இளம் புத்திசாலி எலி கூறிய யோசனை : "நான் இரவு நேரத்தில் பக்கத்து மருந்துக்கடையிலிருந்து தூக்க மாத்திரைகளை எடுத்து வந்தேன். பூனை குடிக்கும் பாலில் அவற்றைப் போட்டேன். அது அயர்ந்து தூங்கும்போது மணியைக் கட்டினேன்" என்று சொன்னது.

இரண்டாம் இளம் புத்திசாலி எலி கூறிய யோசனை : "பூனையின் கழுத்தில் மணி கட்ட முடியாது. ஆனால், பூனை குட்டி போட்டிருக்கிறது. அந்தக் குட்டி இன்னும் கண் விழிக்கவில்லை. அதன் கழுத்தில் மணியைக் கட்டலாம்". அதன்படியே, தாய்ப் பூனை வேட்டையாடச் சென்றிருக்கும் போது, எலிகள் ஒன்று சேர்ந்து கண் விழிக்காத குட்டியின் கழுத்தில் சிறியதொரு மணியைக் கட்டின.

பின் பூனை, குட்டியோடு வரும்போது மணிச்சத்தம் கேட்டு ஓடி ஒளிந்தன. அத்தோடு குட்டிப் பூனை பெரிதானாலும் மணி அதன் கழுத்திலேயே தொடர்ந்து இருக்கும்.

---

## கற்கண்டு

**இயல் ஒன்பது**

## 9.உ. அணியிலக்கணம் – இலக்கணம்

**மதிப்பீடு**

**பகுதி – I. (ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக (பாடநூல் வினா).**

**"கேடில்விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை" – இக்குறளில் பயின்று வந்துள்ள அணி ?**

அ) சொல் பின்வருநிலையணி ஆ) பொருள் பின்வருநிலையணி
இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) வஞ்சப்புகழ்ச்சியணி

**விடை : ஆ) பொருள் பின்வருநிலையணி**

---

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**பலவுள் தெரிக (கூடுதல் வினா):**

**2. அணிகளில் இன்றியமையாதது**

அ) உவமையணி ஆ) சொல் பின்வருநிலையணி

இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) வஞ்சப்புகழ்ச்சியணி

**விடை : அ) உவமையணி**

**3. "கயல் போல் விழி" – இதில் உவமை உருபு ................**

அ) கயல் போல் ஆ) விழி

இ) போல் ஈ) கயல் **விடை : இ) போல்**

**4. கீழ்க்கண்டவற்றுள் உருவக அணி எது ?**

அ) கைமலர் ஆ) வேல் விழி

இ) மதிமுகம் ஈ) மலர்ப்பாதம் **விடை : அ) கைமலர்**

**5. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை – இக்குறட்பாவில் இடம்பெறும் அணி................**

அ) பொருள் பின்வரு நிலையணி ஆ) சொல் பின்வருநிலையணி

இ) உருவக அணி ஈ) உவமை அணி

**விடை : ஆ) சொல் பின்வருநிலையணி**

**6. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு – இக்குறட்பாவில் இடம்பெறும் அணி................**

அ) சொல் பின்வருநிலையணி ஆ) பொருள் பின்வருநிலையணி

இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) சிலேடை அணி

**விடை : இ) சொற்பொருள் பின்வருநிலையணி**

**7. புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் ............ ஆகும்**

அ) பொருள் பின்வருநிலையணி ஆ) உருவக அணி

இ) சொற் பின்வருநிலையணி ஈ) வஞ்சப்புகழ்ச்சியணி

**விடை : ஈ) வஞ்சப்புகழ்ச்சியணி**

---

**பகுதி – II. (இரண்டு மதிப்பெண்கள்)**

**குறுவினா (பாடநூல் வினா).**

**1. நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன். இத்தொடரில்அமைந்துள்ள உருவகத்தைக் கண்டறிக.**

**விடை :** கவித்தேன்

---

**குறுவினா (கூடுதல் வினா):**

**2. அணி என்றால் என்ன ?**

**விடை :** ✶ செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது அணி எனப்படும்.

✶ சொல்லாலும் பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது "அணி" இலக்கண இயல்பாகும்.

---

**பகுதி – III. (மூன்று மதிப்பெண்கள்)**

**சிறுவினா (பாடநூல் வினா):**

**1. உருவக அணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**

**விடை :**

✶ கவிஞன் தான் ஒரு பொருளைச் சிறப்பிக்க எண்ணி, அதற்கு உவமையாகும் மற்றொரு பொருளோடு ஒன்றுபடுத்திக் கூறுவான். உவமையின் தன்மையைப் பொருள்மேல் ஏற்றிக் கூறும் இத்தன்மையே "உருவகம் " எனக் கூறப்படும்.

✶ உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது உருவக அணி ஆகும்.
(எ.கா)

*ï ‹ brhš É i sÃykh<jny É ¤jhf*
*t ‹ brh‰ f i s f£L thŒ i kvU t £o*
*m ‹ òÚ®ghŒ¢á mw¡ f â®< ‹ wnjh®*
*i g§ Tœ áWfh i y¢ brŒ.*

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் ஒன்பது

# 9.எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி

**I. எழுத்துகளை முறைப்படுத்திச் சொற்களைக் கண்டுபிடிக்க:**

| | விடை : |
|---|---|
| 1. புன்பமொப்லமைழி | 1. பன்மொழிப்புலமை |
| 2. யனிநேம்தம | 2. மனிதநேயம் |
| 3. கச்வப்ஞ்புசிழ்ச | 3. வஞ்சப்புகழ்ச்சி |
| 4. தைக்விதுகபு | 4. புதுக்கவிதை |
| 5. டுசிப்காட்ஞ்ப | 5. காஞ்சிப்பட்டு |

**II. அகராதி காண்க.**

**குரிசில், தலையளி, நயம், உய்த்தல், இருசு**

**விடை :**

| | |
|---|---|
| **குரிசில் :** | இனியவற்றை முகமலர்ந்து கூறுதல், உயர் அன்பு, அருள். |
| **தலையளி :** | உயர் அன்பு, இரக்கம். |
| **நயம் :** | திறன், சிறப்பு, மேன்மை, அழகு, இன்பம், போற்றுகை. |
| **உய்த்தல் :** | செலுத்தல், கொண்டுபோதல், சேர்த்தல், நடத்துதல், அமிழ்த்தல், நுகர்தல், கொடுத்தல், நீக்குதல், அறிவித்தல். |
| **இருசு:** | நேர்மை, வண்டி அச்சு, மூங்கில். |

**III. தொகைச் சொற்களைக் கொண்டு பத்தியைச் சுருக்குக.**

**சேர, சோழ, பாண்டிய அரசர்களிடம் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, தரைப்படை ஆகியவை இருந்தன. அவர்கள் மா, பலா, வாழை ஆகிய கனிகளுடன் விருந்தோம்பல் செய்தனர். கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய திசைகளில் அவர்களின் ஆட்சிப்புகழ் பரவியிருந்தது. தமிழகத்தின் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களில் உள்ள புலவர்கள் இவ்வரசர்களை இம்மையிலும் மறுமையிலும் வாழ்கவென்று வாழ்த்தினர்.**

**விடை "**

**மூவேந்தர்களிடம்** **நாற்படைகள்** இருந்தன. அவர்கள் **முக்கனிகளுடன்** விருந்தோம்பல் செய்தனர். **நாற்றிசைகளில்** அவர்களின் ஆட்சிப் புகழ் பரவியிருந்தது. தமிழகத்தின் **நானிலங்களில்** உள்ள புலவர்கள் இவ்வரசர்களை இருமையிலும் மறுமையிலும் வாழ்கவென்று வாழ்த்தினர்.

**IV. வினைப்பகுதிகளை எச்சங்களாகவும், முற்றாகவும் மாற்றுக.**

**பூங்கொடி நேற்றுப் பள்ளிக்குச் .............(செல்), தன் தோழிகளைக் ..............(காண்), மகிழ்ச்சியுடன் ..... (உரை); பின்னர் வங்கிக்குப் ............. (போ) தான் கூடுதலாகச் ..............(செலுத்து) தொகையைத் திரும் ................ (பெறு) ............ (கொள்) வந்தாள். வரும் வழியில் வீட்டுக்கு ............... (வேண்டு) பொருள்களை .............. (வா). அங்கு ........... (நில்) பேருந்தில் .............. (ஏறு) வீடு ............. (திரும்பு).**

**விடை :**

பூங்கொடி நேற்றுப் பள்ளிக்குச் **சென்று**, தன் தோழிகளைக் **கண்டு**, மகிழ்ச்சியுடன் **உரையாடினாள்**; பின்னர் வங்கிக்குப் **போய்** தான் கூடுதலாகச் **செலுத்திய** தொகையைத் திரும்பப் **பெற்றுக்கொண்டு** வந்தாள். வரும் வழியில் வீட்டுக்கு **வேண்டிய** பொருள்களை **வாங்கினாள்**. அங்கு **நின்ற** பேருந்தில் ஏறி வீடு **திரும்பினாள்**.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**V. பொருத்தமான தமிழ் எண்களைக் கொண்டு நிரப்புக.**

**தமிழிலுள்ள மொத்த எழுத்துகள் ........ ஆகும். இவை முதலெழுத்து, சார்பெழுத்து என்று ........ பிரிவாகப் பிரிக்கப்படும்; ............ உயிரெழுத்துகள், .............. மெய்யெழுத்துகள் ஆகிய ............ எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும். இவற்றைச் சார்ந்து பிறப்பவை சார்பெழுத்துகள் என்றழைக்கப்படுகின்றன; சார்பெழுத்துகள் ........ வகைப்படும்.**

**விடை :**

தமிழிலுள்ள மொத்த எழுத்துகள் உ௪௭ (247) ஆகும். இவை முதலெழுத்து, சார்பெழுத்து என்று உ (2) பிரிவாகப் பிரிக்கப்படும்; க௨ (12) உயிரெழுத்துகள், க௮ (18) மெய்யெழுத்துகள் ஆகிய ௩0 (30) எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும். இவற்றைச் சார்ந்து பிறப்பவை சார்பெழுத்துகள் என்றழைக்கப்படுகின்றன; சார்பெழுத்துகள் க0 (10) வகைப்படும்.

---

**VI. காட்சியைக்கண்டு கவினுற எழுதுக.**



*உயிர்களிடத்து அன்பு வேண்டும்*
*உயிர்ப்பசி போக்குபவன்*
*ஆண்டவனுக்கே*
*தொண்டாற்றும் அடியவனாகிறான்*
*உயிர் நேயமேஉண்மைநாகரிகம்*
*உயிர் நேயம் உள்ளவரே*
*நாகரிகர் ஆவார்........*
*அந்நேயமற்றோர் நரகரே.*

---

**VII. செயல்திட்டம்**

**இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர் சிலரின் படங்களையும் கவிதைகளையும் திரட்டி, படக் கவிதைத்தொகுப்பு உருவாக்குக.**



**"<u>கண்ணகியும் கைகேயியும்</u>"**

*"பால் நகையாள்*
*வெண்முத்துப் பல் நகையாள்*
*கண்ணகியாள் கால் நகையால்*
*வாய் நகை போய்க்*
*கழுத்து நகை இழந்த கதை"*
*"கூனி இவளை வளைக்க*
*வரங்களுக்காக*
*நாணை இழுத்தாள்*
*அது*
*அவள் மங்கள நாணையே*
*வாங்கிக் கொண்டது.*

***– கவிக்கோ அப்துல் ரகுமான்***

**"<u>குழந்தைகள் தினம்</u>"**

*"வருடம் தவறாமல் குழந்தைகள் தினம்*
*கொண்டாடுபவர்களே! இனிமேல்*
*தினங்களை விட்டு விட்டுக் குழந்தைகளை*
*எப்போது கொண்டாடப் போகிறீர்கள் ?"*

***– கவிக்கோ அப்துல் ரகுமான்***

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



"**காலமுதல்வன்**"
*"பொருட்டின்றிக் கடந்து போயிற்று*
*தொடர்ந்தேகினேன் தொலையாத்தூரம்*
*காலத்தைத் தாண்டுதல் சாலுமாவெனப்*
*பொருள் விடிந்தபோது*
*பொருட்டற்றுப் போயிற்று எனக்கும்*
*எனினும் பின்னால்*
*தொடர்ந்தோடி வருகுவதென்*
*காலமுதல்வனே!"*



*–நாஞ்சில் நாடன்*

*"அவள் ஒரு கண்ணாடி*
*அவளருகே சில கற்கள்*
*அவள் நேசிக்கும் கற்கள்*
*அவள் வெறுக்கும் கற்கள்*
*அவள் முன் பின் அறிந்திராத கற்கள்"*



*"கருணையாய் இருங்கள்*
*உங்கள் இதயம் குறுங்கத்தியாக மாறும் வரை*
*இன்னும்*
*அக்கத்தியை பயன்படுத்தும்நேரம் வாய்க்காதவரை*
*கருணையாய் இருங்கள்"*

**– லீனா மணிமேகலை**

**VIII. நிற்க அதற்குத் தக..**
**நான் தலைமைப் பொறுப்பிற்கு வந்தால் ...**

1. அனைவரிடமும் பாகுபாடின்றி நடந்து கொள்வேன்.
2. இயன்றவரை பிறருக்கு உதவுவேன்.
3. பெரியோர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடப்பேன்.
4. **மனிதநேயத்துடன் நடந்து கொள்வேன்.**

**IX. கலைச்சொல்லாக்கம்**

| | | |
|---|---|---|
| **மனிதம்** | – | ***Humane*** |
| **ஆளுமை** | – | ***Personality*** |
| **பண்பாட்டுக் கழகம்** | – | ***Cultural Academy*** |
| **கட்டிலாக் கவிதை** | – | ***Free verse*** |
| **உவமையணி** | – | ***Simile*** |
| **உருவக அணி** | – | ***Metaphor*** |

**X. அறிவை விரிவு செய்..**

1. சிற்பியின் மகள் – ***பூவண்ணன்***
2. அப்பா சிறுவனாக இருந்தபோது – ***அலெக்சாந்தர் ரஸ்கின் (தமிழில் நா.முகமது செரீபு)***

Kindly send me your study materials to padasalai.net@gmail.com


செலக்சன்
எங்கள் வெளியீடுகள் :
3 முதல் 10
வகுப்பு வரை
தமிழ்
ஆங்கிலம்
கணக்கு ( TM & EM )
அறிவியல் ( TM & EM )
சமூக அறிவியல் ( TM & EM )
அன்பு நிலையம்
மதுரை – 625001
94430 43338
94430 46662